## இனிமையான குழந்தைகளே! முழு உலகத்தினையும் பாலனை செய்பவர் ஒரே ஒரு பாபா ஆவார். ஒருபோதும் அவர் யாரிடமும் பாலனை பெறுவதில்லை, சதா நிராகாரமாக இருக்கின்றார் என்ற இந்த விஷயத்தினை அனைவருக்கும் தெளிவாகக் கூறுங்கள்

கேள்வி: தெய்வீக மாணவர்களின் முக்கியமான அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்: தெய்வீக மாணவர்களால் ஒருபோதும் முரளி கேட்காமல் இருக்க முடியாது. முரளி கேட்பதற்கு எங்களுக்கு நேரமேயில்லை என்று கூறமாட்டார்கள். ஞானக் கருத்துக்களை யாரிட மாவது வாங்கிப் படிப்பார்கள். எத்தனை அளவற்ற ஞான கருத்துக்கள் உள்ளது. முரளி கேட்க வில்லை என்றால் எவ்வாறு தாரணையாகும்? இது படிப்பு, பரம ஆசிரியர் பாடம் கற்றுத் தருகின்றார். ஒருபோதும் குழந்தைகள் முரளி கேட்கத் தவறக் கூடாது.

பாடல்: உன்னை அடைந்தவுடன் நாங்கள்............

ஓம் சாந்தி! இப்போது ஆத்மாக்களாகிய நீங்கள் பாபாவை அறிந்து கொண்டீர்கள். இது சிவபாபா என்று குழந்தைகளுக்குத் தெரியும்.அவருக்கு சூட்சுமம் மற்றும் ஸ்தூலமான உடல் கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு சூட்சும உடல் காண்பிக்கப்பட்டுள்ளது. பெயர் கூட உள்ளது. அவருக்குள் ஆத்மா இருக்கின்றது என்பது குழந்தைகளுக்குத் தெரியும். சூட்சுமமான சரீரம் இருக்கின்றது. இச்சமயம் குழந்தைகள் திரிலோகநாத் ஆகின்றீர்கள். இலட்சுமி-நாராயணரை திரிலோகநாத் என்று யாரும் கூறமாட்டார்கள். லட்சுமி-நாராயணருக்கு மூன்று உலகத்தை (மூலவதனம், சூட்சும வதனம், ஸ்தூல வதனம்) பற்றி தெரியாது. ஒவ்வொரு விஷயத்தையும் புத்தியில் நிர்ணயம் செய்ய வேண்டும். சரியா, தவறா என்று சிந்திக்க வேண்டும். எதுவெல்லாம் கேட்கின்றோமோ அவைகளை சத்தியம், சத்தியம் என்று கூறுவது பக்திமார்க்கம். இங்கு நல்லவிதமாகப் புரிய வைக்க வேண்டும். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு சூட்சுமமான சரீரம் உண்டு. ஒரே ஒரு சிவன் மட்டுமே நிராகாரமானவர். அநேக விதமான கோவில்கள் கட்டப்பட்டு உள்ளன, அநேகவிதமான பெயர்களை வைத்துள்ளார்கள். அநேக கோவில்கள் உள்ளன. அங்கே லிங்கம் வைக்கப்பட்டு இருக்கின்றன. மும்பையில் பபூல்நாத் என்று கூறுகின்றார்கள். ஒரே ஒரு சிவன், அயல் நாடுகளிலும் அநேக பெயர் வைக்கப்பட்டுள்ளன. நான் ஆத்மா என்பதை குழந்தைகள் புரிந்து கொண்டார்கள். குழந்தைகளாகிய நமக்கு பரமபிதா பரமாத்மா புரிய வைக்கின்றார். மூன்று உலகத்தின் ஞானத்தினைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இச்சமயம் நீங்கள் திரிலோகநாத். ஏனென்றால் நீங்கள் தெரிந்துக் கொண்டீர்கள். எதுவரை அறிந்து கொள்ள வில்லையோ அதுவரை எப்படி நாத் (தலைவன்) ஆக முடியும். கிருஷ்ணரைக் கூட திரிலோகநாத் என்ற கூறமுடியாது. பிரம்மாவின் குழந்தைகளான பிராமணர்கள் மட்டுமே திரிலோகநாத் எனப்படுபவர். அதாவது யாருக்கு மூன்று காலத்தின் ஞானம் இருக்கின்றதோ. ஞானக்கடல், ஆனந்தக்கடலாக இருப்பவர் பாபா. நிராகாரமான பாபா நமக்கு ஞானத்தினைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சாகார மனிதர்கள் யாரையும் கடவுள் என்று கூறமுடியாது. இங்கு சர்வவியாபி என்று

கூறுகின்றார்கள்.

இப்போது நீங்கள் புரிந்து கொண்டீர்கள், ஒருவரே இறைவன், தந்தை நிராகாரமானவர். அவருக்கு யாருடைய பாலனையும் கிடையாது. மற்ற அனைவருக்கும் பாலனை நடைபெறுகிறது. சிறிய உடலில் ஆத்மா வருகின்றது. தனது விரலை சூப்பிக் கொண்டு கர்ப்பத்தில் இருக்கும். சிவபாபா விற்கு சூப்புவதற்கு விரல் கிடையாது. சிவபாபா கூறுகின்றார்: நான் கர்ப்பத்தில் வருவதில்லை. மற்றவர்கள் கர்ப்பத்தில் வருவார்கள், பின்னர் பாலனை (போஷாக்கு) நடைபெறுகின்றது. தாய் எம்மாதிரியான உணவு சாப்பிடுகின்றார்களோ, புளிப்பானது சாப்பிட்டால், அதன் பாதிப்பு குழந்தைகளுக்கும் ஏற்படும். குழந்தைகளுக்கு பாதிப்பு ஆகின்றது. சிவபாபா கேட்கின்றார்: நீங்கள் எவ்வாறு என்னை பாலனை செய்கின்றீர்கள்? சிருஷ்டியை பாலனை செய்பவர் என்று என்னை கூறுகின்றீர்கள். என்னைவிட மேலானவர் யாருமேயில்லை. இந்த விஷயங்களை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஞானத்தினை சிந்தனை செய்து முக்கியமான கருத்துக் களை எழுத வேண்டும். சிவபாபாவை நாயகன் என்று கூறுகின்றோம். அந்த நாயகனுக்கு மனிதர்கள் அனைவருமே நாயகிகள். நீங்கள் அனைவருமே நாயகிகள், அவர் நாயகன் ஆகிறார். நாயகன் நிராகாரமானவர். எந்த ஒரு சாகார் மற்றும் ஆகாரத்தில் உள்ள ஒருவரை நாயகன் என்று கூறமுடியாது. ஒரே ஒரு சிவபாபா அனைவருக்கும் நாயகனாக இருக்கின்றார். தனது நாயகனை நிராகார் ஆத்மாக்கள் நினைவு செய்கின்றார்கள். நினைவு ஏன் செய்கின்றார்கள்? அவசியம் ஏதாவது கஷ்டம் இருக்கும்!. அனைத்து பக்தர்களும் பகவானை நினைவு செய்கின்றார்கள். இந்த நாயகன், நாயகி நிராகாரமாக உள்ளார்கள். ஒரு சில சாகாரத்தில் உள்ள காதலன், காதலிகளுக்கும் மகிமை உள்ளது. அவர்கள் மிகக் குறைவாக உள்ளனர். ஒருவர் மற்றவரின் தேகத்தின் மீது அன்பு செலுத்துகின்றார்கள். அவர்களுக்கு விகாரத்திற்கான அன்பு யில்லை. ஒருவர் மற்றவரை பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். பார்க்காமல் இருந்தால் சுகமாக இருக்கமாட்டார்கள். சரீரத்தினை நினைவு செய்கின்றார்கள். எங்கு அமர்ந்திருந்தாலும் எதிரிலேயே காதலன் நிற்பதாக எண்ணுவார்கள். அவர்களுக்கும் சாட்சாத்காரம் ஏற்படுகின்றது. ஏனெனில் அது தூய்மையின் (பவித்ரதா) அன்பு. சரீரத்தின் அழகு கூட உள்ளது. விகாரம் என்பது இருக்காது. ஒருவர் மற்றவரை பார்த்தவுடன் மகிழ்ச்சி அடைவார்கள். உணவு சாப்பிடும் போது அவரின் நினைவு வந்தவுடன் சாப்பிடுவதையே மறந்து விடுவார்கள். அவரையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். இம்மாதிரியாக கொஞ்சம் பேர் இருப்பார்கள். இங்கு அனைவருக் கும் நாயகன். இந்த நாயகனுக்கு (சிவபாபா) கொஞ்ச பேர் நாயகிகளாக (பிரியதரிசினி) ஆகின்றார்கள். அவர்கள் முழுமையான மதிப்பெண்ணை பெற்று தேர்ச்சி அடைவார்கள். எட்டு மணிகளுக்கு மிகவும் மகிமை உள்ளது. பக்தர்களின் பகவான் கிடைத்து விட்டார், அவரை எவ்வளவு நினைவு செய்ய வேண்டும். பாபா கூறுகின்றார். குழந்தைகளே!, நிரந்தரமாக என்னை நினைவு செய்யுங்கள், ஏனென்றால் என்னிடமிருந்து உங்களுக்கு மிகவும் சுகம் கிடைக்கின்றது. அவர்களிடமிருந்து அல்பகால சுகம் கிடைக்கின்றது. தங்களுக்குள் மிகவும் அன்புடன் இருப்பார்கள். இவர் எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தை, எல்லைக்கு அப்பாற்பட்ட அன்பு கிடைக் கின்றது. ஒருவரிடம் எல்லைக்கு அப்பாற்பட்ட அன்பு இருக்க வேண்டும்.

அவருக்கு உடல் சார்ந்த பெயரில்லை.

விஷ்ணுவின் இரண்டு ரூபம் லட்சுமி, நாராயணரின் வம்சாவளி இருக்கும். சத்திய யுகத்தின் ஆரம்பத்தில் லட்சுமி-நாராயணரின் இராஜ்யம் இருக்கும். அவசியம் பிரஜைகள் கூட இருப்பார் கள். சத்தியயுக ஆரம்பத்தில் குறைவானர்கள் இருப்பார்கள் பின்னர் அதிகமாகிவிடுவார்கள் என புத்தி கூறுகின்றது. சத்தியயுக ஆரம்பத்தில் லட்சுமி-நாராயணரின் இராஜ்யம் இருந்தது. யமுனை நதிக் கரையோரம் இராதா கிருஷ்ணரின் இராஜ்யம் இருந்தது. கங்கை, யமுனை என்று நிறைய நதிகள் உள்ளன. நதிக்கரையில் வசித்து வந்தனர். கடலுக்குள் துவாரகை மூழ்கி போய்விட்டது என்ற விஷயம் இல்லை. கடலோரம் தேவதைகளின் கிராமம் இருக்கின்றது. இந்த மும்பை இருக்காது. இவைகள் உங்களின் புத்தியில் இருக்கின்றது. இறைவன் தந்தை மிகவும் அன்பானவர். இறை தந்தை என்று கிறிஸ்துவைக் கூறமுடியாது. கிறிஸ்து என்பவர் தூதுவர். அவரை பரமபிதா பரமாத்மா அனுப்பினார். நிராகாரமான உலகத்திலிருந்து வருகின்றார். அவரை இறை தந்தை என்று கூறுவதில்லை. குரு என்று புரிந்துள்ளார்கள். இந்து தர்மம் எப்போது, யாரால் ஸ்தாபனை செய்யப்பட்டது என்று இந்துக்களுக்குத் தெரியாது. இந்து என்று தர்மமேயில்லை. ஆதி சனாதன் தேவி தேவதா தர்மம். நாம் பிராமணர்கள் என்று மக்கள் தொகை கணக்கெடுப்பில் கூறவேண்டும். நாம் இச்சமயம் இந்துவா? நாம் இச்சமயம் பிரம்மா முகவம்சாவளி பிராமணன். நீங்கள் பிராமண தர்மம் என்று கூறினாலும், இந்து என்று எழுது வார்கள். சொர்க்கத்தில் வாக்காளர் பட்டியலே எடுக்கமாட்டார்கள். ஏனென்றால் ஒரே ஒரு தேவி தேவதா தர்மம் தான் இருக்கும். அங்கு கேட்க வேண்டிய அவசியமில்லை. இங்கு நிறைய தர்மங்கள் உள்ளதால் கேட்க வேண்டியதாக உள்ளது. அனைத்து விஷயங்களையும் பாபா புரிய வைக்கின்றார். பாபாவை புத்தியால் நினைவு செய்ய வேண்டும். இவர் நிராகார மானவர். ஒரே ஒரு பெயர் தான் உண்டு. பிரம்மா, விஷ்ணு, சங்கருக்குக் கூட ஆகார சித்திரம் உள்ளது. பார்க்க முடிகின்றது. சிவனுக்கு கிடையாது. இவர் பகவான் என்று புரிந்துள்ளார்கள். தன்னைத் தானே பகவான் என்று கூறமுடியாது. ஆத்மாக்கள் மறுபிறப்பு எடுக்கின்றன. பாபா மறுபிறப்பு எடுப்பதில்லை.

இப்போது நீங்கள் மூன்று காலத்தினையும் அறிந்து கொண்டீர்கள். ஆதலால் திரிலோகநாத் என்ற பெயர் உள்ளது. அறிந்து கொள்பவர்கள் தான் தலைவர்கள். உங்களிடம் மூன்று உலகத்தைப் பற்றிய ஞானம் உள்ளது. பிராமணர்களாகிய நீங்கள் தான் அறிந்துள்ளீர்கள். வேறு யாருக்கும் தெரியாது. கிருஷ்ணர் கூட திரிலோகநாத் கிடையாது. இந்த ஞானம் அங்கு இருக்காது. உங்களுக்குத் தான் ஞானம் கிடைக்கின்றது. ஆதலால் உங்களுக்கு புகழ். தில்வாலா கோவிலில் சிவன், ஆதிதேவன், ஆதிதேவி மற்றும் குழந்தைகளாகிய நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனென்றால் நீங்கள் தற்போது சேவையில் இருக்கின்றீர்கள். தூய்மை யற்றவர்களை தூய்மை ஆக்க பாபா வருகின்றார். குழந்தைகளாகிய உங்களின் உதவியைப் பெறுகின்றார். பாபா கூறுகின்றார்: யாரெல்லாம் எனக்கு உதவி செய்கின்றார்கள் என்று எனக்குத் தெரியும். இதனை அனைவரும் புரிந்து கொள்ளலாம். இதன் பலனாக சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆகின்றீர்கள். அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். சிவபாபாவின் கடை, மனிதர்களை தேவதையாக ஆக்குவதற்கானது. அவர்களும்

வரிசைப்பிரகாரமாக உள்ளார்கள். மகாரதிகளின் கிளை நிலையங்கள் நன்கு நடைபெறும். நல்ல விற்பனையாளர் என அறியப்படும். அனைத்து கடைகளும் சிவபாபாவுடையது. நீங்கள் அழிவற்ற ஞான ரத்தினங்களை வியாபாரம் செய்கின்றீர்கள். இந்த பாபா எவ்வளவு சாதாரணமாக உள்ளார். உண்மை மற்றும் பொய்க்கு எவ்வளவு வேறுபாடு உள்ளது. ஒரே ஒரு பாபா தான் உண்மை கூறுபவர், மற்றவைகள் அனைத்தும் பொய். ஸ்ரீமத் தரக்கூடிய பரமபிதா பரமாத்மாவை சர்வவியாபி என்று கூறுவது மிகப்பெரிய பொய். தெரியாது என்று கூறுவார்கள். இரவணன் யார்? எப்போது வந்தான்? இதைப்பற்றி யாருக்குமே தெரியாது. உலகத்தினர் இராவணனை திரேதாயுகத்தில் காட்டி யுள்ளனர். கிருஷ்ணரை துவாபர்யுகத்தில் காட்டி யுள்ளார்கள். சத்தியுகத்தைப் பற்றியே தெரியாது. திரேதாயுகத்தில் இராம், சீதா இருந்தார்கள். அங்கு இராவணன் என்ற பேச்சேயில்லை. இச்சமயத்தின் விஷயங்கள். இம்மாதிரியான பொய்களைக் கூறிவிட்டார்கள். யாரிடமாவது கூறினால் பிரம்மா குமாரிகள் கற்பனையாகக் கூறுகின்றார்கள் என்று கூறுவார்கள். இப்போது குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். பாபா கூறும் ஞானத்தினை தாரணை செய்ய வேண்டும். எங்கிருந்தாலும் முரளி கேட்டு படிக்க வேண்டும். அவ்வாறு நேரமில்லை என்று கூறக்கூடாது. தெய்வீக மாணவருக்கு நேரமில்லை என்றால் என்ன சொல்வது? பிறரை எவ்வாறு தாரணை செய்விப்பது? எவ்வளவு கருத்துக்களை கூறுகின்றார், முரளியைக் கேட்கவில்லை, படிக்கவில்லை என்றால் எவ்வாறு தாரணை செய்ய முடியும்? இது படிப்பாக உள்ளது. பரம ஆசிரியர் பாடம் கற்றுத் தருபவர் சிவபாபா. முரளி கேட்கவில்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படிக் கூறுவது?

பாபா பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டவர் என்று குழந்தைகள் தெரிந்துள்ளீர்கள். பிறப்பு இறப்பில் வருவ தில்லை. ஆனால் அவரின் பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்கள். சிவனின் பிறப்பு ஏற்பட்டது என்று யார் சொல்வார்? அவர் என்ன செய்திருப்பார்? கீதையில் கிருஷ்ணரின் பெயர் போடப்பட்டுள்ளது. ஆனால் அவர் அதே ரூபத்தில் வரமுடியாது. கிருஷ்ணரை வைகுண்டநாத் என்று கூறலாம், திரிலோகநாத் என்று கூறமுடியாது. வைகுண்டம் என்ற சொர்க்கம் இங்கு தான் இருந்தது. இங்கு தான் கிருஷ்ணரும் இருந்தார். இராதா, கிருஷ்ணர் சகோதரன், சகோதரி அல்ல. இருவரும் தனித்தனியான இராஜ்யத்தில் இருந்தார்கள். சுயவரம் எவ்வாறு நடை பெறும் என்று குழந்தைகளுக்கு சாட்சாத்காரம் ஆகியுள்ளது? பாபா ஆரம்பத்தில் குழந்தைகளை மிகவும் சந்தோஷப்படுத்தினார். பட்டியில் இருந்தார்கள். எந்த உறவினர்களையும் சந்திக்க மாட்டார்கள். பாபா அதிகமாக சாட்சாத்காரம் காட்டியுள்ளார். பின்னர் இறுதியில் நிறைய காட்டுவார். நாம் வைகுண்டத்தில் இருப்பதாகவே எண்ணுவார்கள். இறுதி சமயத்தில் மனிதர்கள் மிகவும் துக்கம் அடைவார்கள், நிறைய ஆபத்துக்கள் உண்டாகும். இதுவே இரத்த வெள்ளம் என்று கூறப்படுகின்றது. உலகம் இதனை அறியாது. அரசாங்கத்தினர் வந்து ஆலோசனை கேட்பார்கள். என்பதும் இல்லை. அனைவருக்கும் அழிவு உண்டாகும். அழிவற்ற தந்தையிடம் இருந்து அழியாத பதவியை அடைந்து கொண்டிருக்கின்றீர்கள். பிரஜையில் வந்தாலும் கூட ஒஹோ சௌபாக்கியம். அங்கு சுகமே சுகம். இங்கு துக்கமே துக்கம். இப்போது பாபா பாடம் கற்றுத் தர வந்துள்ளார், படிக்க வேண்டு மல்லவா? காரியங்களைச் செய்தாலும் கையால் வேலை செய்தாலும் புத்தியில் பாபாவை நினைவு செய்ய வேண்டும்.

குடும்பத்தில் இருந்தாலும், பாபாவை நினைவு செய்ய வேண்டும். பாபா சொர்க்கத்திற்கே எஜமானராக ஆக்குகின்றார். பாபாவை என்னவென்று எண்ணுகின்றீர்கள். 21 பிறவிகள் இராஜ்யம் செய் கின்றீர்கள். கவலை என்பதே இருக்காது. இங்கு மனிதர்கள் எல்லாம் கவலைப்படுகின்றார்கள். அங்கு கவலையே இருக்காது. நீங்கள் அங்கு பிராப்தியை அனுபவம் செய்வீர்கள். அங்கு நமக்கு எதுவுமே தெரியாது. அழிவற்ற தந்தை யிடமிருந்து ஆஸ்தியை அடைகின்றோம் என்ற ஞானம் இப்போது தான் பெறுகின்றோம். இராஜ்யத்தின் ஆஸ்தியை தானாகவே அடைவோம். தானம், புண்ணியம் செய்வதால் இராஜாவாக ஆவோம் என்பதல்ல. இங்கு செய்யும் முயற்சியின் பலனே அதுவாகும். அப்படியானால் எவ்வளவு முயற்சி செய்ய வேண்டும்? இதன் மூலம் 21 பிறவிக்கான பிராப்தியை அடைகின்றோம். அங்கு முயற்சி, பிராப்தி என்ற பேச்சேயில்லை. எதையாவது அடைய முயற்சி செய்யுமாறு, அங்கு அப்பிராப்தி என்ற பேச்சேயில்லை, அனைவரும் செல்வந்தர் களாக இருப்பார்கள். இங்கு மனிதர்கள் வக்கீல், டாக்டர் ஆக படிக் கின்றார்கள். அங்கு நீதிபதி இல்லை. டாக்டர் இல்லை. அங்கு யாருமே பாவம் செய்ய மாட்டார்கள். அங்கு திருட்டு என்பதேயிருக்காது. நீங்கள் முழு உலகத்திற்கும் எஜமானராக ஆகின்றீர்கள். எந்த விஷயத்திற்கும் கவலையே இ!ருக்காது. உணவுக்கு விலை என்பதே இருக்காது. இங்கு கூட பாபா (பிரம்மா பாபா) காலத்தில் எட்டு அணா, பத்து அணாவிற்கு ஒரு மணங்கு (அப்போதை எடை) தானியங்கள் கிடைத்து கொண்டிருந்தன. அதற்கு முன் காலத்தில் எப்படி இருந்திருக்கும்? இப்போது மிகவும் விலைவாசி கூடிவிட்டது. இன்னும் விலை வாசிகள் அதிகமாகும். பின்னர் விலை மிகவும் குறைந்து விடும். உங்களுக்கு நாடகத்தின்படி அனைத்துமே கிடைக்கும். அவர்களின் உதவியின் முலமாக உங்களுக்கு இராஜ்தானி கிடைக்கும். இரண்டு குரங்கு சண்டையிடும்போது உங்களுக்கு வெண்ணெய் கிடைக்கும். நமக்கு பாடம் கற்றுத் தருபவர் யார் என்று உலகத்தினருக்குத் தெரியாது. இது குப்தமான வேஷம். உங்களுக்கு ஒரு வினாடியில் வைகுண்டத்தின் இராஜ்தானி கிடைக்கின்றது. கடவுளின் நண்பன்! கதை உள்ளதல்லவா? இந்த மகிமை பாபாவுடையது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சிறந்த புத்திசாலியான விற்பனையாளர் ஆகி அழிவற்ற ஞான ரத்தினங்களை வியாபாரம் செய்ய வேண்டும். அழியாத பிராப்தியை உருவாக்கிக் கொள்ள தனது புத்தியின் யோகத்தினை ஒரு பாபாவிடம் வைக்க வேண்டும்.

2. மதிப்புடன் தேர்ச்சி அடைய உண்மையிலும், உண்மையான நாயகியாக ஆக வேண்டும். ஒரே ஒரு நாயகனின் நினைவில் நிரந்தரமாக இருக்க வேண்டும்

வரதானம் : சர்வ சக்திவானுக்கு துணைவனாக ஆகி அனைவரின் மீதும் சுபபாவனை வைக்கக் கூடிய சிந்தனை அல்லது கவலையிலிருந்து விடுபட்டவர் ஆகுக.

இன்னாரது நோய் சரியாகி விட வேண்டும், குழந்தை அல்லது கணவன் ஞானத்திற்கு வந்து விட வேண்டும், தொழில் சரியாகி விட

வேண்டும் என்று சில குழந்தைகள் சிந்திக்கின்றனர். இந்த பாவனை நல்லது தான், ஆனால் உங்களது இந்த விருப்பம் நிறைவேற வேண்டுமென்றால் நீங்கள் இலேசானவர்களாகி தந்தை யிடமிருந்து சக்திகளை பெற வேண்டும். இதற்கு புத்தி என்ற பாத்திரம் காலியாக இருக்க வேண்டும். அனைவருக்கும் நன்மை விரும்புகிறீர்கள் எனில் சுயம் சக்தி சொரூபமாகி சர்வ சக்திவானுக்கு துணைவனாகி சுபபாவனை வைத்துக் கொண்டே செல்லுங்கள். சிந்தனை அல்லது கவலையிலிருந்து விடுபடுங்கள், பந்தனங்களில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

சுலோகன்: கேள்விகளிலிருந்து விலகியிருப்பவர்கள் தான் சதா மகிழ்ச்சியாக இருப்பார்கள்.